## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை
## யாழ்ப்பாண மாவட்டம்

---

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 25 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 27 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 ஆவணச் சான்றுகள் இன்மை

ரூபா 198,000 பெறுமதியான சான்றுகள் இல்லாமையின் காரணமாக 01 கொடுக்கல் வாங்கலை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது

#### 1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987ம் ஆண்டின் பிரதேசசபைகள் சட்டம் | |
| (i) அத்தியாயம் III பிரிவு 24 | சபைகளின் வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்கள் அரச வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) அத்தியாயம் V பிரிவு 120 | ரூபா 122,232 பெறுமதியான முற்பணங்கள் மீளாய்வாண்டில் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988ம் ஆண்டின் பிரதேசசபைகள் நிதி நிர்வாக விதி அத்தியாயம் III விதி 33 | ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் வரி மதிப்பீட்டு எழுதுநரால் வரி இறுக்கத் தவறுவோரின் பட்டிலொன்று செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2015 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 56,275,746 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 34,900,898 ஆக இருந்ததுடன் வாடகை அரசிறை மானியங்களில் அதிகரிப்பு ஏற்பட்டமையினால் நிதிவிளைவு ரூபா 21,374,848 அதிகரித்துள்ளமையை காட்டுகின்றது.

### 2.2 தொழிற்படு மூலதனம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 180,432,230 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 166,884,332 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 13,547,899 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 வருமான முகாமைத்துவம்

#### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2015 | | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளபடியானது** | **டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் 2015** |
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| இறைகளும் வரிகளும் | 670 | 141 | 2,138 |
| குத்தகை வாடகைகள் | 39,117 | 30,598 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,369 | 1,433 | - |
| ஏனைய வருமானங்கள் | 60,009 | 79,847 | 78,655 |
| மொத்தம் | **101,165** | **112,019** | **80,793** |

#### 2.3.2 வீதவரிகள்

சபையின் செயலாளரினால் வீதவரி நிலுவை ரூபா 2,138,421 அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 முத்திரைக்கட்டணங்கள்

2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 97,559,923 பெற்றுக்கெள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

பிக்கப் வாகனம் பழுதடைந்த நிலையில் பயன்பாடின்றி காணப்படுகின்றது.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்னை

3 மில்லியன் பெறுமதியான ஒரு செயற்திட்டம் முடிக்கப்பட்டுள்ள போதும் நீர் வழங்கல் செயற்பாடு நிறுத்தப்பட்டுள்ளது.

### 3.3 திண்மக்கழிவு முகாமைத்துவம்

சபையின் எல்லைக்குள் திண்மக்கழிவுச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 50,052 தொடக்கம் ரூபா 2,537,829 வரையான வேறுபாடு காணப்பட்டுள்ளது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் திருப்திகரமாக மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்

சபையில் மீளாய்வாண்டில் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடைபெற்றிருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீடு
(ஆ) வருமான அறவீடு
(இ) முற்பணம்